மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பாஸ் புக்குகள் தேவையில்லை ; இனிமேல் பிராட்மா இயந்திரத்தின் மூலம் சம்பளப் பட்டுவாடா செய்வதை மின் வாரியத்தில் உள்ள எல்லாத் தரப்பு தொழிலாளர்களுக்கும் அமல் படுத்தினால் இந்த பாஸ் புக்கே தேவைப்படாது.

1980-ஆம் வருடத்திய எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு.

* வினா எண். 546—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 மார்ச் மாதத்தில் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் '0' விழுக்காடு பெற்ற பள்ளிகள் எத்தனை ? அதில் தனியார் பள்ளிகள் எத்தனை ? அரசுப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) 100 சதவீதம் பெற்ற பள்ளிகள் எத்தனை ? அதில் அரசுப் பள்ளிகள் எவ்வளவு ? தனியார் பள்ளிகள் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

	எண்ணிக்கை.
(அ) 1980 மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்வில் '0' விழுக்காடு பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை	11
அவைகளில், தனியார் பள்ளிகள் ..	3
அவைகளில், அரசுப் பள்ளிகள் ..	6

மீதமிரண்டும் மாநகராட்சிப் பள்ளிகளாகும்.

(ஆ) 100 சதவீதம் பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை	56
அவைகளில் அரசுப் பள்ளிகள்	20
தனியார் பள்ளிகள் ..	34

மீதமிரண்டும் நகராட்சிப் பள்ளிகளாகும்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி மிக முக்கியமான கேள்வி. நம்முடைய மாணவர்களைப் பயிற்றுவிக்கின்றபொழுது அவர்கள் அதிக எண்ணிக்கையுள்ள மார்க்குகளைப் பெற பெருமுயற்சி எடுத்துக் கொள்ளும் அதே நேரத்தில்

1981 மார்ச் 30]

தமிழ்நாட்டில் பரவலாகப் பல்வேறு பள்ளிகளில் மாணவர்கள்மீது அறிவுத்துறை மூலம் பயிற்சி கொடுப்பதற்குப் பதிலாக, அடக்குமுறை மூலம் பயிற்சி கொடுத்து பல்வேறு மாணவர்கள் கண்கெட்டுப் போய் இருக்கின்ற செய்தி வந்திருக்கிறது; இந்தத் துறையில் சமீபத்தில் நடந்திருப்பதாகச் செய்தி வந்திருக்கின்ற நிகழ்ச்சிகளில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது புதிதாக உத்தரவு பிறப்பிக்கப்பட முன் முயற்சி எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எங்கேயோ நடைபெற்ற ஒரு தவறான நடவடிக்கையைப்பற்றி இங்கே கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வியோடு சேர்த்துக் கேட்கின்றார்கள். அடக்குமுறையினாலே சொல்லித்தர வேண்டுமென்ற எண்ணம் சரியல்ல. ஆனால், அறிவுத்துறையிலே வளர்ச்சியை உண்டுபண்ணுவது என்பது, ஆசிரியப் பெருமக்கள் தாங்கள் பெற்றிருக்கின்ற பயிற்சிக் கல்வியின் மூலம், அவர்கள் பெற்றிருக்கின்ற அந்த அறிவின் மூலம் பல்வேறு முறைகளைக் கையாண்டு இந்த வளர்ச்சியை மாணவர்கள் பெற வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த மூலக்கேள்வியோடு தொடர்புடைய ஒரு பதிலைச் சொல்ல விரும்புகிறேன். பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இருக்கின்ற இது போன்ற பள்ளிகளில் தனி வகுப்புகளை எடுத்து சிறப்புக் கவனம் செலுத்தி இந்தக் குறைபாட்டைப் போக்க வேண்டுமென்று இந்தத் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விழுக்காடு மிகவும் குறைந்துள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மீது ஏன் விழுக்காடு குறைந்திருக்கிறது என்று கேட்டு ஏதாவது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? விழுக்காடு அதிகம் பெற்றுள்ள பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களை, விழுக்காடு அதிகம் பெற்றிருக்கிறது என்ற காரணத்திற்காக உற்சாகப்படுத்துகின்ற முறையில் ஏதாவது தனிப்பட்ட விசேஷ கவனம் செலுத்தி அவர்களுக்கு பரிசுத் திட்டம் ஏதாவது அரசு வழங்கி இருக்கிறதா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இப்பொழுது விழுக்காடு மிகவும் குறைவாக உள்ள பள்ளிகள் மலைஜாதியினர் அல்லது பிற்பட்டோர் படிக்கின்ற பள்ளிகளா அல்லது நகர்ப்புறங்களில் இருக்கின்ற நடுத்தர மக்கள் படிக்கின்ற பள்ளிகளா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விழுக்காடு குறைந்து, '0' அளவிற்கு ரிசல்ட் பெற்றிருக்கின்ற பள்ளித் தலைமையாசிரியர்களிடமும், ஆசிரியர்களிடமும் நாம் வழக்கம்போல் எப்பொழுதும் விளக்கம் கேட்பது உண்டு. அவர்களுக்கு இருக்கின்ற பொறுப்பை உணர்த்துகின்ற வகையில் அந்த விளக்கம் கேட்கப்பட்டு மேல் நடவடிக்கை

எடுக்கப்படுகிறது. இதிலே '0' ரிசல்ட் விழுக்காடு பெற்றுள்ள பள்ளிகளில் இரண்டு செவிடர் பள்ளிகளாக இருக்கின்றன; ஒன்று ஜவ்வாது மலையிலே இருக்கின்ற வன உயர்நிலைப்பள்ளி; வேறு சில அரசாங்கப் பள்ளிகள் முதலியவை. 'சென்டெம்' பெற்ற பள்ளிகளுக்கு கல்வியமைச்சர் என்ற முறையில் நாம் பாராட்டுப் பத்திரத்தை அனுப்புகிறோம்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலில் 100 சதவீதம் பெற்ற பள்ளிகளில் அரசுப் பள்ளிகள் இருபது என்று சொன்னார்கள். இருந்தாலும் இது 50 சதவீதத்திற்கும் குறைவாகவே இருப்பது என்பது உண்மையாகிறது. மேலும் இப்படிப்பட்ட பள்ளிகள் நகராட்சிப் பள்ளிகளா அல்லது அரிசன நலத்துறைப் பள்ளிகளா அல்லது நேரடியாகவே கல்வித்துறை மூலம நடத்தப்படும் பள்ளிகளா? இந்தக் குறைபாட்டுக்குக் காரணம், உரிய காலத்திலே போதுமான ஆசிரியர்கள் கிடைக்காமையும், அவர்களுக்கு அவ்வப்போது புத்தக வசதி காலத்திலே கொடுக்கப் படாமையும்தான் காரணம் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சீரோ ரிசல்ட் வாங்கிய பள்ளிகளில் அரிசன நலப் பள்ளி ஒன்றுகூட இல்லையென்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். ஆனால், குறைபாடு என்று வருகின்றபொழுது, நாம் புத்தகங்கள் தருகின்றோம், அல்லது வேறு பல உதவிகளைச் செய்கிறோம் என்றாலும் கூட ஆசிரியர்கள் கொஞ்சம் கவனம் எடுத்துக் கொண்டு சொல்லித் தரவேண்டுமென்றுதான் இந்த சீரோ ரிசல்ட்டைப் பொறுத்த மட்டில் நாம் வலியுறுத்த வேண்டியதாக இருக்கிறது. காரணம், ஒரு ஆசிரியர் ஒரு டியூஷன் வைத்துக்கொண்டால்கூட, அந்தப் பையனாவது பாஸ் செய்திருப்பான். ஆகவே, ஒரு பையன் கூட பாஸ் செய்யவில்லையென்பதில், ஓரளவுக்கேனும் பொறுப்பை பள்ளித் தலைமை ஆசிரியரும், பள்ளி ஆசிரியரும் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதற்கடுத்த ஆண்டிலே அத்தகைய குறைபாடுகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டிய நிலையிலே நிச்சயம் பாடுபட்டாக வேண்டுமென்பதை மட்டும் நான் இப்பொழுது சொல்லிக் கொள்கிறேன்.

நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர்களுக்குப் பணிப்படி.

* வினா எண். 547—திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர்கட்கும் பணிப்படி வழங்கும் திட்டம் உண்டா?